Registered as a Newspaper

நல்லூர் கிளை நூலகம்

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

மக்கள் தினசரி

Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | கார்த்திகை 15 | ( 30-11-93 ) | செவ்வாய்க்கிழமை | ஓசை 285

## க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு கணித, விஞ்ஞானபாடங்களில்மாற்றம்

கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சைகான பாடங்களின் எண்ணிக்கையில் செய்யப்படவுள்ள மாற்றத்தின் விபரம் தற்பொழுது வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறைகள் உட்பட அனைத்து துறைகளுக்கும் இந்த மாற்றம் கொண்டுவரப்படவுள்ளது. கணிதத்துறையில் உள்ள தூய கணிதம், பிரயோக கணிதம் ஆகிய இரு பாடங்களையும் ஒன்றாக இணைத்து ஒரு பாடமாகவும், தாவரவியல், விலங்கியல் ஆகிய இரு பாடங்களையும் இணைத்து ஒரு பாடமாகவும் கருதப்படவுள்ளது. மேற்படி மாற்றங்கள் மிக விரைவில் நடைமுறைக்கு வரும் என்றும் இதேபோல கல்விப் பொதுத் தராதர (4ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் கட்டுப்பாட்டினாலும், உயிர்த்தியாகத்தினாலும் இலங்கையில் தமிழ் தேசியவாதம் செழித்து ஓங்குகிறது!

(லண்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுடன் நடப்பதற்கும் கட்டளைக்கு பணிந்து நடப்பதற்கும், உயிர்த்தியாகத்திற்கும் கடும் போக்கிற்கும் பெயர் பெற்றவர்கள். இவை முழுமையாக கடைப்பிடிக்கப்படவேண்டியவை இவற்றினால் தமிழ் தேசியவாதம்செழிக்கிறது இன்றையதமிழரைக்கவர விடுதலைப் புலிகள் தமிழ் மக்கள் காலம்காலமாக போற்றி காத்துவந்த இந்த குணாம்சங்களை மிகத் திறமையாக பயன்படுத்துகின்றனர். இவ்வாறு விடுதலைப்புலிகளும் தமிழ் தேசிய வாதமும் என்ற தலைப்பில் கல்பனா ஐசாக் என்பவர் பி. பி ஸிக்கு எழுதிய ஆய்வுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுவதாவது; கடந்தவாரம் புலிகள் ஆண்டுதோறும் கொண்டாடும் மாவீரர் தினத்தை நடத்தினர் போரில் இறந்த வீரர்களுக்கு அஞ்சலி செய்யும் கொண்டாட்டங்கள் இவை. இதன் போது புலிகளின் தேசியவாதம் உச்சத்தை எட்டும். மரணம் என்பது மிகஉயர்ந்த தியாகம், கௌரவம் என புகழ்சூட்டப்படும்.

பெரும்பான்மை சிங்களவர் ஆரம்பித்து வைத்த இரு கலாசாரமும் வெவ்வேறானவை என்ற கருத்தை புலிகள் பூர்த்தி செய்து வருகின்றனர். இதை பூர்த்தி செய்ய புலிகள் தமிழ் தேசிய வாதத்திற்கு ஏற்ற குணாம்சங்களை எடுத்துக்கொண்டனர். புலிகள் தமது கட்டுப்பாடு குறித்து பெருமிதம் அடைகின்றனர். தமிழர்களால் இதை புரிந்து கொள்ள முடியும். தமிழ் பண்பாடே கட்டுப்பாடு, கடும் உழைப்பை சுற்றி எழுப்பப்பட்டது. கேளிக்கைகளுக்கு கிடைக்கும் வெற்றியால் நியாயம் காட்ட வேண்டும் இக்கொள்கை (4ஆம் பக்கம் பார்க்க)

# விமானத் தாக்குதலைக் குழப்பும் பலத்தை புலிகள் பெற்றுவிட்டனர்!

## 2 இராணுவம் படுகாயம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச்சோலை பகுதியில் இம்மாதம் 9 ஆம் திகதி விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே நடைபெற்ற மோதலில் இரு சிறிலங்கா இராணுவத்தினர் படுகாயம் அடைந்துள்ளனர்

2-ம் கோப்ரல் ஏ பி. குமாரசிங்க, மற்றும் ஏ. எல் யூ. ரணசிங்க ஆகியோர் படுகாயம் அடைந்துள்ளனர்என தெரியவருகின்றது.

## பூநகரி சமரில் பங்குபற்றிய இராணுவ அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

பூநகரி - நாகதேவன்துறை கூட்டுத் தளத்தில் புலிகள் கைப்பற்றிய விமான எதிர்ப்பு ஆயுதங்கள் மூலம் எதிர்காலத்தில் வான் தாக்குதல்களை குழப்பியடிக்கும் பலத்தை புலிகள் பெற்றுவிட்டனர் என வடபகுதி கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தமது முக்கிய தாக்குதல் ஊடகமான வான் தாக்குதல்களை குழப்பக்கூடிய வல்லமையை புலிகள் பெற்றுள்ளமை வருங்கால இராணுவ நடவடிக்கைகளுக்கு பெரும் சவாலாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வன்னியில் பெரும் வெள்ள அபாயம்; குளங்கள் நிரம்பிவழிகின்றன

### நூற்றுக்கணக்கானோர் வீடிழப்பு

(கிளிநொச்சி)

வன்னிப்பிராந்தியத்திலும் தொடர்ந்து பல நாட்களாக கடும் மழை பெய்து வருகிறது இதனால் வன்னிப்பிராந்தியத்தில் உள்ள பல குளங்களின் கட்டுகளுக்கு மேலாக பெருக்கெடுத்து ஓடிககொண்டிருக்கிறது.

குளங்கள் பெருக்கெடுத்து ஓடுவதாலும் மக்களின் குடியிருப்புப் பகுதிகளில் வெள்ளம் ... றுக்கணக்கான குடும்பங்கள் தமது குடியிருப்புக்களை விட்டு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்

இரணை மடுக்குளத்தின்

ரசிங்க, மற்றும் ஏ. எல் யூ. ரணசிங்க ஆகியோர் படுகாயம் அடைந்துள்ளனர்என தெரியவருகின்றது.

## பூநகரி சமரில் பங்குபற்றிய இராணுவ அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

**பூநகரி - நாகதேவன்துறை கூட்டுத் தளத்தில் புலிகள் கைப்பற்றிய விமான எதிர்ப்பு ஆயுதங்கள் மூலம் எதிர்காலத்தில் வான் தாக்குதல்களை குழப்பியடிக்கும் பலத்தை புலிகள் பெற்றுவிட்டனர் என வடபகுதி கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தமது முக்கிய தாக்குதல் ஊடகமான வான் தாக்குதல்களை குழப்பக்கூடிய வல்லமையை புலிகள் பெற்றுள்ளமை வருங்கால இராணுவ நடவடிக்கைகளுக்கு பெரும் சவாலாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார்.**

'பூநகரி மோதலில் பங்குபற்றிய அவர் 'டெய்லி நியூஸ்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் மேலும் குறிப்பிடுகையில்;

வடக்கில் வருங்காலத்தில் எடுக்கப்படவிருக்கும் இராணுவத் தாக்குதல்களுக்கு பூநகரி - நாகதேவன்துறை முகாம்கள் புலிகளால் அழிக்கப்பட்டமை பெரும் இக்கட்டானதோர்சூழ்நிலையை ஏற்படுத்தி உள்ளதாகவும், ஒரு பெரும் நவீன படைப் பிரிவிற்கு தேவையான இராணுவத் தளபாடங்களை புலிகள் கைப்பற்றி வைத்துள்ளனர் எனவும் கூறினார்.

வடபகுதிமேல் குறிப்பாக குடாநாட்டின் மீது எடுக்கப்படவிருக்கும் இராணுவ நடவடிக்கைகளுக்கு பூநகரி-நாகதேவன்துறை முகாம்கள் புலிகளால் தகர்க்கப்பட்டு அழிக்கப்பட்டமை மிகவும் பாரதூரமானதோர் இக்கட்டான சூழ்நிலையை தோற்றுவித்துள்ளது.

ஒரு நவீன பெரும் படைப் பிரிவிற்கு ஏற்ற தளபாடங்கள் கனரகத் துப்பாக்கிகள், இதர ஆயுதங்கள் ஆகியவற்றை போதியளவு புலிகள் இப்போது தம்வசம் வைத்துள்ளார்கள் என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

எமது வருங்கால இராணுவ நடவடிக்கைகளுக்கு இது பெரும் சவாலாக அமைந்துள்ளது. இதற்குரிய காரணம் என்னவென்றால் எமது முக்கிய தாக்குதல் ஊடகமான வான் தாக்குதல்களை புலிகளால் இப்பொழுது குழப்பியடிக்க முடியும் என்பதே.

இதுவரை காலமும் எம்.17 உலங்கு வானூர்திகளைப் பாவித்து மூன்று படையணிகளை இவற்றின் மூலமாக எடுத்துச் சென்றோம். அதுவும் புலிகளின் விமான எதிர்ப்புகளுக்கு எட்டாத உயரத்தில்தான் இது சாத்தியமானது என்றும் அவர் அப் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை தினமும் மறு அறிவித்தல் வரை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## விஜேதுங்க அரசாங்கத்திற்கு தொண்டா ஒரு மாத கால அவகாசம்

### தொழிலாளர் கூலியை உயர்த்தக் கோரிக்கை

மலையக மக்களிற்கு அரசு கூலியைஉயர்த்தாவிடின்தாம் விஜேதுங்க அரசுக்கு அளித்து வரும் ஆதரவை விலக்கிக் கொள்ள நேரிடும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான தொண்டமான் எச்சரித்துள்ளார்

காங்கிரசின் தேசிய செயற்குழு கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டதாகவும் இன்னும் ஒரு மாதத்தினுள் மலையக மக்களின் தொழிற்சங்க பிரச்சினைக்கு அரசு தீர்வு காண வேண்டும் என கட்சி அவகாசம் விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

சுமார் 5லட்சம் மலையக இந்திய தமிழர்களின் வாக்குகளை ஆளும் ஐ. தே க அரசு நம்பியிருப்பதால் இக்கட்சியின் அரசாங்கத்தில் அமைச்சராகவும் இருக்கும் தொண்டமான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இது குறித்து பேச்சுகள் நடத்திவருகிறார்.

## எறிகணை வீச்சு

(குருநகர்)

நேற்று முன் தினம் முன்னிரவு 8.30 மணியளவில் அல்லைப்பிட்டி, மண்கும்பான் மண்டைதீவு சிறிலங்கா இராணுவ முகாம்களில் இருந்து யாழ் நகரையும், கரையோ

(4ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக்கட்சியுடன் இணைய தொண்டா பேச்சுவார்த்தை

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் கூட்டு முன்னணியுடன் இணைந்து கொள்ளும் முயற்சியில் தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஈடுபட்டுவருவதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயற்குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்,

இவ் விடயம் குறித்து 'சந்தேசிய' வானொலிக்கு கருத்து தெரிவித்த பி. பி. ஸி செய்தியாளர், "இவ்வாறு இணைந்துகொள்வது தொடர்பாக தற்பொழுது சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது" என்றார்.

மேலும் சிறிலங்கா ஜனாதிபதி டி. பி விஜேதுங்க தமிழர் பிரச்சினையை ஒரு பயங்கரவாதப் பிரச்சினை என குறிப்பிட்டுவருவதனால் தமிழ்க் கட்சிகள் மனங்குழம்பிய நிலையில் உள்ளன.

தற்போது எதிர்க் கட்சிகளின் கூட்டு முன்னணியுடன் இணைந்து கொள்வதற்காக சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தை சாதகமாக அமைந்தால் எதிர்வரும் தேர்தல்களில் எதிர்க்கட்சிகளின் கூட்டுமுன்னணி ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெரும் சவாலாக அமையும்.

சுதந்திரக் கட்சியுடன்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இரவுநேர குண்டுவீச்சு

(தென்மராட்சி)

சிறிலங்கா விமானப் படையினரின் 'புக்காரா' குண்டு வீச்சு விமானமொன்று நேற்று இரவு எட்டு மணியளவில் கெற்பெலி விடத்தற்பளை ஆகிய பகுதிகளில் இரு குண்டுகளை வீசியது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் பெரும் வெள்ள அபாயம்; குளங்கள் நிரம்பிவழிகின்றன

### நூற்றுக்கணக்கானோர் வீடிழப்பு

(கிளிநொச்சி)

வன்னிப்பிராந்தியத்திலும் தொடர்ந்து பல நாட்களாக கடும் மழை பெய்து வருகிறது இதனால் வன்னிப்பிராந்தியத்தில் உள்ள பல குளங்களின் நீர்மட்டம்உயர்ந்து அணைக்கட்டுகளுக்கு மேலாக பெருக்கெடுத்து ஓடிககொண்டிருக்கிறது.

குளங்கள் பெருக்கெடுத்து ஓடுவதாலும் மக்களின் குடியிருப்புப் பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டிருப்பதாலும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தமது குடியிருப்புக்களை விட்டு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்

இரணை மடுக்குளத்தின் நீர் மட்டம் 31 அடி 3 அங்குலத்திற்கு உயர்ந்துள்ளது இதனால் இக்குளத்தின் 11 வாயில்களும் திறந்து விடப்பட்டிருக்கின்றன.

இவற்றைவிட அக்கராயன் குளம், புதுமுறிப்புக்குளம், மணியன்குளம் ஆகியவற்றின் நீர்மட்டங்களும் உயர்ந்துள்ளன. இவற்றில் இருந்தும் நீர் பாய்ந்தோடிக்கொண்டிருக்கிறது. இதுவரை சுமார் 300 குடும்பங்கள் இடம்பெயர்ந்து அக்கராயன் குளம் மகாவித்தியாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களுக்கு அரச நிவாரணங்களோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களது நிவாரண உதவிகளோ கிடைக்கவில்லை.

மேலும் பெருமழை காரணமாகவும் வெள்ளப்பெருக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

## கடும் மழை காரணமாக 150 குடும்பம் இடம் பெயர்வு

### குடிசைகள் இடிந்து விழுந்தன

(நமது நிருபர்)

கடந்த மூன்று நாட்களாக தொடர்ச்சியாக பெய்துவருகின்ற கடும் மழையினால் முள்ளி ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த சுமார் 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

இவ்வாறு இடம்பெயர்ந்த மக்கள் அப்பகுதியில் அமைந்துள்ள பாடசாலை, ஆலயம் மற்றும் உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

தொடர்ச்சியாக பெய்து வருகின்ற மழையினால் ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கு இவர்களின் குடியிருப்புக்களினுள் புகுந்தது இதனை அடுத்து குடிசைகள் வெள்ளத்தில் மூழ்கியும் அதன் சுவர்கள் இடிந்து வீழ்ந்தும், மற்றும் உடைமைகள் சேதமடைந்தும் உள்ளன. அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினால் நேற்றுவரை இவர்களுக்கு எந்தவித உதவியும் வழங்

(4ஆம் பக்கம் பார்க்க)

## குடியிருப்புகள் மீது தாக்குதல்நடாத்திய சிறிலங்கா 'டோரா' பீரங்கி படகு மீது காவல் துறையினர் எதிர்த்தாக்குதல்

(நமது நிருபர்)

வடமராட்சி கடற்பரப்பில் தாக்குதல் நடாத்தியவாறு கரையை நோக்கி விரைந்து வந்த சிறிலங்கா கடற்படையின் பீரங்கி படகை தமிழீழ காவல் துறையினர் விரட்டியடித்தனர்.

நேற்று முன்தினம் மாலை மூன்று மணியளவில் சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான 'டோரா' பீரங்கிப் படகொன்று நாகர் கோவில் பிரதேச மக்கள் குடியிருப்புகளை நோக்கி துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தவாறு கரையை அண்மித்து கொண்டிருந்தது.

அவ்வேளை கரையோர காவல்கடமையில் ஈடுபட்டிருந்த தமிழீழ காவல் துறை நாகர் கோவில் பணிமனை உறுப்பினர்கள் இப் பீரங்கி படகு மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

காவல்துறையினரின்எதிர்த்தாக்குதலை அடுத்து கடற்படை படகு பின்வாங்கிச் சென்றதுஇத்தாக்குதலில் தமிழீழ காவல்துறையினர் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் கடற்படையினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

## நள்ளிரவில் மீனவர் மீது ஹெலி தாக்குதல்

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் பூநகரி பகுதியில் 'புக்காரா' விமானம் குண்டு வீச்சு நடத்திக்கொண்டிருந்தவேளை-

கல்முனை, பூவரசந்தீவுக் கடற்பிரதேசத்தில் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்களை இலக்குவைத்து உலங்கு வானூர்தி 50 கலிபர் தாக்குதலை நடத்தியதாகவும்,

அதேவேளை பூநகரி-பெரிய வேலி கடலில் தரித்துநின்ற சிறிலங்கா கடற்படை ரோந்துப் படகில் இருந்து ஒரே நேரத்தில் பீரங்கித் தாக்குதல் தொடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடற்றொழிலில் ஈடுபட்ட நூற்றுக்கும் மேற்பட்ட மீனவர்கள் நீந்தி கரை வந்து சேர்ந்தனர் (21)

## நடவடிக்கை

பளை அரசன் நகரில் அண்மையில் இடம்பெற்ற ''யாழ் தேவி'' சிறிலங்கா இராணுவ நடவடிக்கையின் போது வெளியேறிய 46 குடும்பங்களுக்கென தமிழர் புனர்வாழ்வுக்கழக பளை, புலோப்பளைப் பிரிவினர் புலோப்பளை பிரதாபன் சனசமூக நிலையத்திற்கு சமீபமாக வீடுகளை அமைத்து வருகின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## மேற்பார்வையாளர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதம் ஆறாம் திகதி ஆரம்பமாக இருக்கும் க. பொ. த சாதாரணதரப் பரீட்சையின்மேற்பார்வையாளர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 5ஆம்திகதி யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்ட சகலரும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ். கல்வித்திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது

## காகிதாதிகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்).

எதிர்வரும் ஆறாம் திகதி நடைபெற இருக்கும் க.பொ. த(சா/தர)பரீட்சையின் யாழ் மாவட்ட பரீட்சை நிலையங்களிற்கான காகிதாதிகள் யாழ் கல்வித்திணைக்களத்தினால் எதிர்வரும் புதன் கிழமை முதல் விநியோகிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே கொழும்பில் இருந்து கப்பல் மூலமாக யாழ் கல்வித்திணைக்களம் எடுத்துவரப்பட்ட இக் காகிதாதிகள் தரப்பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பரீட்சை நிலையங்களுக்கும் விநியோகிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (பா)

## புதிய கட்சியாக இணைவர்

(கொழும்பு)

கம்யூனிஸ்ட் கட்சியும், சம சமாஜ கட்சியும் இம்மாதம் 30ஆம் திகதி புதிய ஒரு பேரில் ஒரு கட்சியாக இணைய போவதாக பெற்றி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

1977க்குப் பின்னர் சமாஜவாதி கொள்கையை முன் வைத்து சமாஜவாதி முன்


## கல்வி ஆண்டு - 1994

### புதிய வகுப்புகள் / பிரிவுகள்

(ஆண்டு 4 — 11 வரை)

டிசம்பர் 5 முதல் ஆரம்பமாகின்றன

### புதிய அனுமதிகள்

- இம் மாதம் 25ஆம் திகதி முதல் வழங்கப்படுகின்றன.
- டிசம்பர் 31ஆம் திகதியின் பின் வழங்கப்படமாட்டாது.
- பெற்றோர் நேரில் வந்து அனுமதி பெறுவது விரும்பத்தக்கது.

-அதிபர்

இணையற்ற சேவையில்......
உயர்ந்து விளங்கும் நிறுவனம்.

ESTD:- 1973 REGD:- No J/7993

The Express Institute

IRUPALAI - KOPAY

(சி-8020)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,இலங்கை

### விஞ்ஞான பீடம்

### மாணவர்களைப் பதிவு செய்தல் 1992/93 கல்வியாண்டு

1. புதிதாக விஞ்ஞான பீடத்திற்கு அனுமதி பெற்ற மாணவர்கள் 1993-12-09 1993-12-10 ஆகிய திகதிகளில் பின்வரும் ஆவணங்களுடன் நேரில் வந்து யாழ் பல்கலைக்கழகத்திலே பதிவு செய்யுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுப்பப்பட்ட அனுமதிக்கடிதம்.
ஆ) பிறப்புச் சான்றிதழ் (மூலபபிரதி)
இ) பாடசாலை விடுகைப் பத்திரம்
ஈ) 8 புகைப்படங்கள் — 2'' × 2½''
உ) தேசிய அடையாள அட்டை
ஊ) கட்டணம் ரூபா 305/-

தேவையான விண்ணப்பப்படிவங்கள் உதவிப்பதிவாளர், யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

2. 1991/92 கல்வியாண்டு அனுமதி பெற்றுத் தமது படிப்பை 1992/93 கல்வியாண்டிற்குப் பிற்போடு


## 31-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு:
6-2-1969

வீரச்சாவு:
31-10-1993

### கப்டன் அருண் R.P.G. மாமா

(சின்னத்தம்பி அருமைத்துரை)

நிந்தவூர்

தென்னாபிரிக்கா கவச வாகனங்களும்
செக்கோ நாட்டு தாங்கிகளும்
எங்கள் மண்ணை ஆக்கிரமிக்க வரும்
பொழுதெல்லாம் தடுத்து
நிறுத்திய நீ தவறுதலாக ஏற்பட்ட
வெடி விபத்தொன்றால் இன்று
உன்னை இழந்து துயருறுகின்றோம்.

உன்பிரிவால் வாடும்
உறவினர்கள்.

23/1 ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்

(6722)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
26-12-1954

உதிர்வு
30-11-1992



### அமரர் தாமோதரம்பிள்ளை தர்மசேகரம் (புத்தூர்)

(மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதி அலுவலர்)

அன்பு மகன் என்று! ஆசை மகன் என்று!
என் மீது பாசம் கொட்டி
கட்டியணைத்திட என் பாசம்,
மிகு அப்பாவே நீங்கள்... எங்கே?
ஓராண்டு காலமாய்
காணத்துடிக்கின்றோம் கவலையுடன் இங்கே.

அன்பு மகன் குகராஜ்

## கண்ணீர் அஞ்சலி

கூட்டுறவு உதவி ஆணையாளர் (பனை, தென்னை வள அபிவிருத்திப் பிரிவு வடபிராந்தியம்) அவர்களது தந்தையார் திரு. ப. திருநாவுக்கரசு அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடை பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவில் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அங்கத்தவர், பணிப்பாளர், பணியாளர்,
கோப்பாய், அரியாலை, யாழ்ப்பாணம்,
வேலணை பனை, தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும்,
யாழ். பகுதி கொத்தணியும்.

(சி-8023)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### மொறிஸ் அன்ரன் அருள் நேசராசா

தாயின் மடியில் 1-6-1964 தாயக மண்ணில் 30-11-1992

ஈவிரக்கமற்ற கடற்படை கடலில் வந்து
ஏவிவிட்ட வேட்டு எமக்கு எமனாச்சே
சாவுமணி அடிப்பதற்கு தூதாய் வந்த
சண்டாளர் நாம் தவிக்கச் சதிசெய்தாரோ
மேவுமருட் செல்வமெங்கள் நேசராசா நீ
மேலுலகை சென்றடைந்து ஓராண்டாச்சு
காலங்கள் உருண்டோடி காவியங்கள்
மாறினாலும் எந்நாளும் உமைமறவோம்

இவரது ஆத்மஇளைப்பாற்றிற்காகஇன்று30-11-1993 பிற்பகல்4.30 மணிக்கு பருத்தித்துறை புனித அந்தோனியார்ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பீச்றோட்,
பருத்தித்துறை.
(சி-8019)

தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, தாய், பிள்ளைகள்,
சகோதரர்கள் உற்றார், உறவினர்கள்.

## நினைவு கூருகின்றோம்...

30-11-1993

இருந்து கப்பல் மூலமாக யாழ் கல்வித்திணைக்களம் எடுத்துவரப்பட்ட இக் காகிதாதிகள் தரம்பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பரீட்சை நிலையங்களுக்கும் விநியோகிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (பா)

## புதிய கட்சியாக இணைவர்

(கொழும்பு)

கம்யூனிஸ்ட் கட்சியும், சமசமாஜ கட்சியும் இம்மாதம் 30ஆம் திகதி புதிய ஒரு பேரில் ஒரு கட்சியாக இணைய போவதாக பெற்றி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

1977க்குப் பின்னர் சமாஜவாதி கொள்கையை முன்வைத்து சமாஜவாதி முன்னணி'' என்ற பெயரில் இக்கட்சிகள் இரண்டும் ஒன்றிணைய இருப்பதாகவும் இன்று இந்த நாட்டின் ஜனநாயக கட்சிகள் யாவும் ஒன்றிணைய வேண்டும் எனவும் தமது கட்சி இரண்டும் ஒன்றிணைந்த போதும் பொது மக்கள ஐக்கிய முன்னணிக்கு வழங்கும் ஆதரவைத் தொடர்ந்தும் இப்புதிய கட்சி வழங்கும் என்றும் இதில் எந்தவித மாற்றமும் இல்லை எனவும் லங்கா சமசமாஜ கட்சியின் செயலாளர் பெற்றி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை 1993

மேற்குறிப்பிட்ட பரீட்சை முன்னர் அறிவிக்கப்பட்ட திகதிகளில்நடைபெறமாட்டாதெனவும், கீழ்வரும் திகதிகளாகிய 04-12-93, 05-12-93, 11-12-93,12-12-93 திகதிகளில் நடைபெறும்என்பதனை மாணவர் கவனத்தில் கொள்ளவும்.

பதிவாளர்.

(8024)

---

### 1992/93 கல்வியாண்டு

1. புதிதாக விஞ்ஞான பீடத்திற்கு அனுமதி பெற்ற மாணவர்கள் 1993-12-09 1993-12-10 ஆகிய திகதிகளில் பின்வரும் ஆவணங்களுடன் நேரில் வந்து யாழ் பல்கலைக்கழகத்திலே பதிவு செய்யுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுப்பப்பட்ட அனுமதிக்கடிதம்.
ஆ) பிறப்புச் சான்றிதழ் (மூலபபிரதி)
இ) பாடசாலை விடுகைப் பத்திரம்
ஈ) 8 புகைப்படங்கள் — 2'' × 2½''
உ) தேசிய அடையாள அட்டை
ஊ) கட்டணம் ரூபா 305/-

தேவையான விண்ணப்பப்படிவங்கள் உதவிப்பதிவாளர், யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

2. 1991/92 கல்வியாண்டு அனுமதி பெற்றுத் தமது படிப்பை 1992/93 கல்வியாண்டிற்குப் பிற்போடுவதற்கு அனுமதி கிடைத்தவர்கள் தங்களது பதிவை உடனடியாகப் புதுப்பிக்க வேண்டும்.

3. முதலாம் வருட வகுப்புக்கள் 1993-12-20இல் ஆரம்பமாகும்.

4. இரண்டாம், மூன்றாம், நான்காம் ஆண்டிற்கான வகுப்புக்கள் 1993-12-06இல் ஆரம்பமாகும்.

பதிவாளர்.

(சி-8022)

---

பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி விரிவுரைகள்

### கல்வியாண்டு 1994/95

பின்வரும் பாடநெறிக்கான விரிவுரைகள்

**5-12-93 இல் ஆரம்பமாகின்றன**

**கலைமாணி** B A.

**விஞ்ஞானமாணி** B Sc (புள்ளி விபரவியல்)

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம். 1993 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி 2-12-1993**

விண்ணப்பப் படிவத்தினையும், விபரத் திரட்டினையும் பெறவிரும்புவோர் ரூபா 10 பெறுமதியான முத்திரையை அனுப்பி நேரிலோ அல்லது தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:
உதவிப் பதிவாளர்

**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கென தனித்துவமாக கடந்த 15 வருடங்களாக இயங்கும் ஒரேயொரு நிறுவனம் யாழ் நகரில் இதுவே.

(சி-7819)

---

26-12-1954

உதிர்வு

30-11-1992



அமரர் **தாமோதரம்பிள்ளை தர்மசேகரம்** (புத்தூர்)

(மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதி அலுவலர்)


அன்பு மகன் என்று! ஆசை மகன் என்று!
என் மீது பாசம் கொட்டி
கட்டியணைத்திட என் பாசம்,
மிகு அப்பாவே நீங்கள்... எங்கே?
ஓராண்டு காலமாய்
காணத்துடிக்கின்றோம் கவலையுடன் இங்கே.

வட்டுக்கோட்டை.
(6717)

அன்பு மகன் குகராஜ்
மனைவி, மைத்துனன்,
சகோதரி, மாமா, மாமி.

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
1961-04-24

அரனடியில்
1989-11-30

அமரர்

**முருகேசு - திருஞானசேகரம்**

(தமிழாசிரியரும், புத்தெழில் மாதசஞ்சிகை ஆசிரியரும் புத்தெழில் புத்தகசாலை உரிமையாளரும்)

புத்தெழில் படைத்து
நல்லாசானாய் உயர்ந்து
தமிழ் மண் நேசிப்பில் - உயிர்நீத்த
எம்செல்வமே
உன்பிரிவால் ஒளியிழந்து தவிக்கிறோம்,

உமது ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருஞானசேகரம் வீதி,
புத்தூர்.

என்றும் உமது பிரிவால்
துயருறும்
அன்புத்தாய், தந்தை,
அண்ணை, அண்ணி, தம்பி

(6725)

---

30-11-1992

ஈவிரக்கமற்ற கடற்படை கடலில் வந்து
ஏவிவிட்ட வேட்டு எமக்கு எமனாச்சே
சாவுமணி அடிப்பதற்கு தூதாய் வந்த
சண்டாளர் நாம் தவிக்கச் சதிசெய்தாரோ
மேவுமருட் செல்வமெங்கள் நேசராசா நீ
மேலுலகை சென்றடைந்து ஓராண்டாச்சு
காலங்கள் உருண்டோடி காவியங்கள்
மாறினாலும் எந்நாளும் உமைமறவோம்

இவரதுஆத்மஇளைப்பாற்றிற்காகஇன்று30-11-1993 பிற்பகல்4.30 மணிக்கு பருத்தித்துறை புனித அந்தோனியார்ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பீச்றோட்,
பருத்தித்துறை.
(சி-8019)

தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, தாய், பிள்ளைகள்,
சகோதரர்கள் உற்றார், உறவினர்கள்.

---

## நினைவு கூருகின்றோம்...
## 30-11-1993

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1985ஆம் ஆண்டு கொழும்பு பனாகொடை இராணுவத் தலைமையகத்திலிருந்து தப்பிச் செல்கையில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**லெப். யோசப்** (கணபதிப்பிள்ளை நாகராசா - பொத்துவில்-03 - அம்பாறை)

**லெப். ஜோண்சன்** ( — ஜுனைதீன் - ஓட்டமாவடி - மட்டு)

1987ஆம் ஆண்டு பிட்டிப் பகுதியில் தேசவிரோதிகள் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**இரத்தினம்** (கந்தையா சபாகுலநாதன் - வேராவில் - பூநகரி)

மட்டுநகரில் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழ்ப் பெண்

திருமலை - மூதூர்ப் பகுதியில் சிறிலங்கா காவல் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 07 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு மட்டு. களுவாஞ்சிக்குடிப் பகுதியில் பாம்பு கடித்ததில் எமைப் பிரிந்த -

**செல்வா** (வேல்நாயகம் வசந்தராசா - கல்முனை - அம்பாறை)

உரும்பராய், யோகபுரம் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1990ஆம் ஆண்டு மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**பத்மப்பிரியா** (சுகிர்தா வன்னியசிங்கம் - 17/11, நாவலடி, வண்ணார்பண்ணை - யாழ்)

**யேக்கா** (சீத்தாலட்சுமி தம்புத்துரைச்சாமி - வீரமாணிக்கதேவன்துறை, மயிலிட்டி - யாழ்)

1991ஆம் ஆண்டு மட்டு - கொடுவாமடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

மட்டு. அம்பாறைத் தளபதி

**லெப். கேணல் ஜோய்** (கணபதிப்பிள்ளை ரகுநாதன் - கொம்மாந்துறை, செங்கலடி - மட்டு)

1992ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த -

**கப்டன் முகுந்தன் / கிர்மானி** (பிரான்சிஸ் றொபேட் வின்சன் - குருநகர் - யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8018)

யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

நைல் நதியிலே தூக்கிப் போட்டாலும் வாயிலே மீனை கவ்விக் கொண்டு கரையேறுவான் அதிர்ஷ்டசாலி.

- அரபுப் பழமொழி


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 30-11-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05


## சிசிலின் துரதிர்ஷ்டம்

இனப்பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினையல்ல. அதனை விரைவிலேயே தீர்த்து வைத்துவிட முடியும் என சிறிலங்கா ஜனாதிபதி சில மாதங்களுக்கு முன் பேசத் தொடங்கியபோது, இவரது கணிப்பீட்டில் தப்பு இருக்கின்றது என்று தெரியத் தொடங்கியதுதான். ஆயினும் இது சிங்கள அரசியல்வாதிகளின் வழமையான அரசியல் 'ஸ்ரண்ட்' என்ற சந்தேகமும் சிறியளவில் இருக்கத்தான் செய்தது. ஆனால், சிறிலங்கா ஜனாதிபதி தற்பொழுது குழம்பிப் போய் இருப்பதைப் பார்க்கும்போது அவரது கணக்கு தப்புக் கணக்கே என்பது தெளிவாக தெரிய வருகின்றது.

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா தொடர்ந்து ஏற்பட்ட இராணுவத் தோல்வியினால் மூன்று ருடங்களில் இராணுவக் கட்டமைப்பில் இரண்டு தடவை மாற்றம் செய்திருந்தார். ஆனால், தற்போதைய னாதிபதி டி. பி. விஜேதுங்க ஏழு மாதத்திற்குள் உட்பட தனது ஆட்சிக் காலத்தில் இரு தடவை இராணுவ கட்டமைப்பில் மாற்றத்தைச் செய்திருப்பதில் இருந்தே அவரது குழப்பத்தையும் அவரது நம்பிக்கை சிதறடிக்கப்பட்டுப் போனதையும் தெளிவாகப்புரிந்து கொள்ளலாம்

சிறிலங்காவின் தற்போதைய இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்னா ஒருவகையில் துரதிர்ஷ்டசாலிதான். ஏனெனில், அவரது கையில் அதிகாரங்கள் இருத்த போதெல்லாம் இராணுவம் மிகப் பெரும் பின்னடைவுகளைச் சந்தித்தது. ஜனாதிபதி பிரேமதாசா ஆட்சிக் காலத்தின் போது இவரிடம் சிறிது காலமே (1992 மார்ச் ஒக்டோபர்) முழுமையான அதிகாரம் இருந்தது. அக்காலத்திலேயே, அராலிக் கண்ணிவெடித் தாக்குதலில் லெப். ஜெனரல் கொப்பேகடுவ உட்பட 9உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டனர். அதையடுத்து கட்டைக்காட்டில் கோடி ரூபாவிற்கு மேலான ஆயுதத்தையும் இழக்க வேண்டி வந்தது. இவை இரண்டும் சிசில் வைத்தியரெட்னாவின் தோல்வியாகவே விமரிசிக்கவும்பட்டன.

பின்னர், கூட்டுப்படைத் தலைமையகத்திற்கு அதிகாரம் மாற்றப்பட்டது. ஆனால், மண்கிண்டிமலை தாக்குதலுடன் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தப்பித்துக் கொண்டார். மிக விரைவில் வெற்றி பெறவேண்டும் என்ற ரீதியில் செயற்பட்ட டி பி. விஜேதுங்க மீண்டும் அதிகாரங்களை இராணுவத் தளபதியிடம் ஒப்படைத்தார்.

## சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேற 'ஹெல உறுமய' குழு திட்டம்

### ம. ஐ. முவுடன் இணைவர்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து விரைவில் வெளியேறவிருக்கும் ஹெல உறுமய குழுவினர் மக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து கொள்ளவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

1995 இல் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலின் போது இக்குழுவினர் மக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிட திட்டமிட்டுள்ளனர்எனவும்இதற்கான இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாக மக்கள்ஐக்கியமுன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அநுராவுடன் இணைந்து செயற்பட்ட திலக் கருணாரட்ண, ஹேமகுமார நாணயக்கார, டிக்சன் டி. ஜே. பெரேரா, எஸ். குணவர்த்தனா, கமல் கருணாநாயக்க, டாக்டர் நெவில் பெர்ணான்டோ ஆகியோரே இவ்வாறு சுதந்திரக்கட்சியிலிருந்து வெளியேற இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்தால் தமக்கு அடுத்த தேர்தலில் போட்டியிடக் கூட சந்தர்ப்பம் கிடைக்காது என்பதால் இவர்கள் மக்கள் ஐக்கிய முன்னணியில் இணைந்துகொள்ள தீர்மானித்துள்ளனராம்.

இதேவேளை ஜினதாச நியதபால, லயனல் ராஜபக்ச ஹலீம் இசாக் ஆகியோரை ஐக்கிய தேசியக்கட்சியில் இணைக்க அநுராவுடன்நெருங்கியவர்கள் முயற்சி செய்வதாக கூறப்படுகிறது.

## புதிய கப்பல் மூலம் மண்ணெய்எடுத்துவரப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்கென நவம்பர் மாதத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மண்ணெண்ணெய் வந்துசேர்ந்ததும் குடும்பத்திற்கு மூன்று லீற்றர் வீதம் வழங்கப்படவுள்ளதாக யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி தெரிவித்துள்ளது.

கொழும்பில் இருந்து ''மாகோ'' என்கின்ற புதிய கப்பலில் இம்மண்ணெய் ஏற்றப்பட்டுக் கொண்டிருப்பதாக தெரியவருகின்றது.

இக் கப்பலில் மண்ணெய் பருத்தித்துறைக்கு எடுத்து வரப்பட்டதும் மேற்படி மண்ணெய் குடும்ப அட்டைகளிற்கு உடனடியாக விநியோகிக்கப்படவுள்ளதாகவும் ஒரு லீற்றர் ரூபா 25 எனவும் தெரிவிக்கப்பட்டது. (பா)

## இலவச நிவாரணத்திற்கு தரமற்ற உணவுப்பொருள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் தரமற்ற நிவாரணப் பொருள்கள் இடம்பெயர்ந்தோருக்குவழங்கப்படுவதாக புகாரிடப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாத இறுதி இரு வாரங்களுக்குமென வழங்கப்பட்ட இலவச நிவாரணப் பொருள்களே பயன்படுத்த முடியாத அளவிற்கு பழுதடைந்து காணப்பட்டன.

திருநெல்வேலியில் உள்ள நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தின் கிளையினால் இடம்பெயர்ந்தவர்களுக்கெனவழங்கப்பட்ட சிந்தாமணிக் கடலை, பயறு ஆகியஉணவுப் பொருள்களே இவ்வாறு பழுதடைந்துள்ளன.

பொருளாதார நெருக்கடிமிக்க இவ் வேளையில் இவற்றை கால்நடைகளுக்கு தீனியாக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக ஒருவர் வருத்தத்துடன் தெரிவித்தார்.

## காயமுற்றவர்மரணம்

(தென்மராட்சி)

கடந்த 14ஆம் திகதி தென்மராட்சிப் பகுதியான குடமியன் வரணிப் பகுதியில் சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான சுப்பர்சொனிக் விமானத் தாக்குதலில் காயமடைந்து யாழ். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த குடமியன் வரணியைச் சேர்ந்த கே.இராஜபூபதி (21 வயது) என்பவர் கடந்த சனிக்கிழமை மருத்துவமனையில் மரணமானார். இத்தாக்குதலில் காயமடைந்த ஏழுபேரில் கடந்த வாரமும் ஒருவர் மரணமானதுகுறிப்பிடத்தக்கது. மிகுதி 5 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (86)

## பொலிஸ்துறை அதிகாரம் மாகாணசபைக்கு வேண்டும்

### - காமினி திஸநாயக்க

(கொழும்பு)

பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிசாரின் நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் அமைச்சரவை முடிவுக்கு இணங்கவே தீர்மானிக்கப்படும் என்று 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதனால் பாதுகாப்பு படையின் அமைப்பு அரசியலாக்கப்பட்டுள்ளது. அத்துடன் பதவி உயர்வுக்காகவும் இடமாற்றத்திற்காகவும் அமைச்சரவை உறுப்பினர்களுக்குப் பின்னால் அலைய வேண்டியதாகியுள்ளது இவ்வாறு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரும், மத்திய மாகாணசபை உறுப்பினருமான காமினி திஸநாயக்க கூறியுள்ளார்

அண்மையில் மத்திய மாகாணசபைக் கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு அமுலாக்கப்பட்டதை தொடர்ந்து ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களின் மெய்ப் பாதுகாப்பு பிரிவில் கடமையாற்றிய பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் பலரும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களாகப் பதவி உயர்த்தப்பட்டனர். இதே நடைமுறை முழு நிர்வாக அலுவல்களுக்கும் பரவியது. எனவே பொலிஸ்துறை அதிகாரங்கள் யாவும் மாகாணசபைகளுக்கு மாற்றப்பட வேண்டும். அதன் மூலம் மாகாணசபைகள் இத்தகைய நடைமுறையிலிருந்துவிலகிட வாய்ப்புஉண்டாகும். அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் இந்த வகையில் ஒரு முதல் படியாகும். அதனை யதார்த்த பூர்வமாக அமுலாக்க வேண்டும்.

13ஆவது திருத்தத்தின் கீழ் அறிமுகமாக்கப்பட்ட பல்வேறு சட்டங்களும் இன்றைய அரசியல் சூழ்நிலைகளுக்கு முற்றிலும் பொருத்தமானவையாகும். ஐ. தே. கவின் ஆளுகைக்கு உட்பட்டிருக்கும் மாகாணசபைகளும் கூட பொலிஸ்துறை அதிகாரங்கள் தமக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கருத்துடன் உடன்பாடு உள்ளவையாகவே இருக்கின்றன என்றும் தெரிவித்தார்.

## தொழில்நுட்பக் கல்விக்கு 70கோடிரூபாசெலவிடப்படும்

### -திஸ்ஸ அத்தநாயக்க

தொழில்நுட்பக் கல்வியை விருத்தி செய்வதற்கு அடுத்த ஆண்டில் எழுபது கோடி ரூபா செலவிடப்படும் என்று உயர்கல்வி அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளார். அடுத்த வருடத்திலிருந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு தொழில்நுட்பக் கல்லூரியாவது செயற்படும் என்றும் மேலும் தெரிவித்தார்.

இரத்மலானை தொழில்நுட்பக் கல்லூரியில் கண்காட்சி ஒன்றைத் திறந்து வைத்த பின்னர் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், அடுத்த நூற்றாண்டில், புதிய கைத்தொழில் நாடு என்ற அந்தஸ்த்தை இலங்கைக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

## தேர்தல் முடிவுகள் குறித்து பாரதீய ஜனதா திருப்தி

(டில்லி)

இதுவரை வெளியான சட்டப் பேரவைத் தேர்தல் முடிவுகள்திருப்திகரமானவையாக இருப்பதாக பாரதீய ஜனதாக்கட்சியின் செயலாளர் பிரமோத் மகாஜன் கூறியுள்ளார். நேற்று முன்தினம் ஜெய்ப்பூரில் நடைபெற்ற மத்திய பாராளுமன்றக் குழுக் யாளர் மத்தியில்பேசிய அவர் மேலும் கூறுகையில், இமாசலப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய மாநிலங்களில் கட்சி தனது நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்டுவிட்டதாகக் குறிப்பிட்டார்.

உத்தரப் பிரதேசத்தில் கட்சிக்கு கிடைத்த வாக்குகள் ஒன்பது சதவீதம் அதிகரித்து

## சமய சார்பற்ற சக்திகளுக்கு காங்கிரஸ் ஆதரவு வழங்கும்

### -செயற்குழு முடிவு

(டில்லி)

தேர்தல்கள் நடந்துமுடிந்த மாநிலங்களில் சமயசார்பற்ற பிரதேச மாநிலத்தில் பகுஜன் சமாஜ் கட்சி மற்றும் சமாஜவாதி ஜனதாக் கட்சி தாக் கட்சி உத்தரப் பிரதேசத்தில் ஆட்சி அமைப்பதைத் தடுப்பதே தமது கட்சியின்

சிசில் வைத்தியரெட்னா ஒருவகையில் துரதிர்ஷ்டசாலிதான். ஏனெனில், அவரது கையில் அதிகாரங்கள் இருந்தபோதெல்லாம் இராணுவம் மிகப் பெரும் பின்னடைவுகளைச் சந்தித்தது. ஜனாதிபதி பிரேமதாசா ஆட்சிக் காலத்தின் போது இவரிடம் சிறிது காலமே (1992 மார்ச் ஒக்டோபர்) முழுமையான அதிகாரம் இருந்தது. அக்காலத்திலேயே, அராலிக் கண்ணிவெடித் தாக்குதலில் லெப். ஜெனரல் கொப்பேகடுவ உட்பட 9உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டனர். அதையடுத்து கட்டைக்காட்டில் ,கோடி ரூபாவிற்கு மேலான ஆயுதத்தையும் இழக்க வேண்டி வந்தது. இவை இரண்டும் சிசில் வைத்தியரெட்னாவின் தோல்வியாகவே விமரிசிக்கவும்பட்டன.

பின்னர், கூட்டுப்படைத் தலைமையகத்திற்கு அதிகாரம் மாற்றப்பட்டது. ஆனால், மண்கிண்டிமலை தாக்குதலுடன் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தப்பித்துக் கொண்டார். மிக விரைவில் வெற்றி பெறவேண்டும் என்ற ரீதியில் செயற்பட்ட டி பி. விஜேதுங்க மீண்டும் அதிகாரங்களை இராணுவத் தளபதியிடம் ஒப்படைத்தார்.

இந்நிலையில்தான், பூநகரி - நாகதேவன் படைத்தளத்தின் வீழ்ச்சிக்கு சிசில் வைத்தியரெட்னா பொறுப்பேற்க வேண்டி வந்தது. இவ்வரலாற்றுத் தோல்வியை யாராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. என்றாலும், பொறுப்பில் இருப்பவர் பொறுப்பேற்க வேண்டியது கட்டாயமானதே.

அதாவது சிசில் வைத்தியரெட்னா பொறுப்பாக இருந்தால் என்ன? ஹமில்டன் வனசிங்கா பொறுப்பாக இருந்தால் என்ன பூநகரி முகாம் விடுதலைப்புலிகளால் தகர்க்கப்பட்டே இருக்கும். பூநகரி முகாம் அதன் பலவீனத்தால் விழவில்லை, அது பாதுகாப்பு ஏற்பாடுகள் நிறையப் பெற்றிருந்த முதலாம் தர முகாமாகவே அது இருந்தது. அங்கு பீரங்கிப்படைப் பிரிவும்நிறுத்திவைக்கப்பட்டே இருந்தது. இந்நிலையில் முகாம்விழுந்தது புலிகளின் தாக்குதலின் உக்கிரத்தினாலும், யுக்தியினாலுமே ஒழிய முகாமில் இருந்த பொறுப்பதிகாரியின் கவனயீனத்தினாலேயோ, இராணுவத் தளபதியின் பொறுப்பின்மையாலேயோ அல்ல.

இருப்பினும், இராணுவத் தோல்விகள், பின்னடைவுகள் ஏற்படும்போது அதற்குப் பொறுப்பான தளபதிகள், அமைச்சர்கள், அரசாங்கங்கள் என்பன பதவி விலகுவது என்பது ஜனநாயக மரபு. இதற்கு உலகில் பல உதாரணங்களாக பல சம்பவங்களும் உண்டு. இந்தியாவில் கூட இதற்கான உதாரணங்கள் உள்ளன. ஆனாலும், சிறிலங்காவில் பூநகரித் தோல்விக்கு எவரும் பொறுப்பேற்றுப் பதவி விலகாமை பெரும் ஆச்சரியம் அளிக்கக் கூடியதல்ல. ஆனால், பொறுப்பேற்க வேண்டியவர்கள் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்துவதுதான் வேடிக்கையானது,

இந்நிலையில், பதவி விலக வேண்டியவர்கள் பதவி விலகாமலும், பொறுப்பேற்க வேண்டிய அரசாங்கம் பொறுப்பேற்காமலும் புதியவர் ஒருவரின் தலையில் சுமைகள் மாற்றப்பட்டுள்ளன. இதன்மூலம், தப்பித்துக் கொண்டோம் எனக் கருதுகிறார்களா? அல்லது வெற்றி கிட்டும் என எண்ணுகிறார்களோ தெரியவில்லை.

ஆனால், புதியவர் சேவைக் காலத்திலேயே தமிழீழப் போராட்டம் தோன்றி வளர்ந்தது என்பதும் இன்றைய நிலையை அடைந்தது என்பதையும், அடக்கும் முயற்சியில் புதியவரும் தோற்றுப் போனவர் என்பதையும் நியமித்தவர்கள் மறந்து போனதுதான் வேடிக்கையானது. ஆகையினால் புதியவரானமேஜர் ஜெனரல் ஜெரிசில்வாவின் தோல்விக்குப் பிறகு யாரை பொறுப்பாகப் போடலாம் என்பதை தற்பொழுதே யோசனை செய்வது அவசியம்.

---

நிவாரணப் பொருள்களே பயன்படுத்த முடியாத அளவிற்கு பழுதடைந்து காணப்பட்டன.

யாக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக ஒருவர் வருத்தத்துடன் தெரிவித்தார்.

கடந்த வாரமும் ஒருவர் மரணமானது குறிப்பிடத்தக்கது. மிகுதி 5 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (86)

கல்லூரியாவது செயற்படும் என்றும் மேலும் தெரிவித்தார்.

இரத்மலானை தொழில்

அந்தஸ்த்தை இலங்கைக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

---

# தேர்தல் முடிவுகள் குறித்து பாரதீய ஜனதா திருப்தி

(டில்லி)

இதுவரை வெளியான சட்டப் பேரவைத் தேர்தல் முடிவுகள்திருப்திகரமானவையாக இருப்பதாக பாரதீய ஜனதாக்கட்சியின் செயலாளர் பிரமோத் மகாஜன் கூறியுள்ளார். நேற்று முன்தினம் ஜெய்ப்பூரில் நடைபெற்ற மத்திய பாராளுமன்றக் குழுக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், இமாசலப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய மாநிலங்களில் கட்சி தனது நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்டுவிட்டதாகக் குறிப்பிட்டார்.

உத்தரப் பிரதேசத்தில் கட்சிக்கு கிடைத்த வாக்குகள் ஒன்பது சதவீதம் அதிகரித்து இருப்பதாகவும்தெரிவித்தார்.

# அணுசக்தித் திட்டத்தை பாக். நிறுத்த மாட்டாது

-- வெளிபுறவு அமைச்சர்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தனது அணுசக்தித்திட்டத்தை எந்தச் சூழ்நிலையிலும் நிறுத்தமாட்டாது என்று பாகிஸ்தானின் வெளியுறவு அமைச்சர் சர்தார் ஆசிப் அலி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், தமது அரசு அணுசக்தித்திட்டத்தில் எந்த மாறுதலையும் மேற்கொள்ள மாட்டாது எனவும், அணுசக்தித்துறையில் தன்னிறைவைப் பெற்றுவிட்டதாகவும்தெரிவித்தார்.

# சோமாலியா பற்றி சர்வதேச மாநாடு

(மொகாடிஸ்யூ)

சோமாலியாவில் சண்டையில் ஈடுபட்டுள்ள இயக்கங்களும், சர்வதேச உதவி வழங்கும் அமைப்புக்களும் நடத்த இருந்த மாநாட்டை கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள இயக்கங்கள் புறக்கணித்தன.

கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள இயக்கங்கள் சமரசம் காண வேண்டும் எனவும், நிவாரண வேலைகளுக்குஆதரவு வழங்க வேண்டும் எனவும் இம்மாநாடு தீர்மானம் நிறைவேற்றியது.

எனினும் ஜெனரல் முகமது பாரா அய்டீட் தலைமையிலான கிளர்ச்சிக்குழு இம்மாநாட்டில் பங்குபற்ற மாட்டாது என்று ஜெனரல் அய்டீட்டின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

உத்தரப் பிரதேச மாநிலத்தில்

# சமாஜவாதி கூட்டணிக்கு காங்கிரஸ் ஆதரவளிக்கும்

(டில்லி)

உத்தரப்பிரதேசத்தில் சமாஜவாதி ஜனதா - பகுஜன் சமாஜ்வாதி கூட்டணிக்கு நிபந்தனையற்றஆதரவைவழங்க காங்கிரஸ் கட்சி முடிவு செய்துள்ளது. இம்மாநிலத்தில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியமைப்பதை முறியடிக்கவே காங்கிரஸ் இந் நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

உத்தரப்பிரதேச அமைச்சரவையில் சேர்வதா இல்லையா என்பதை அடுத்த மாதம் புதுடில்லியில் கூடும் காங்கிரஸ் கட்சி செயற்குழு முடிவு செய்யும் உத்தரப்பிரதேச சட்டப்பேரவை தேர்தலில் எந்தக்கட்சியும் ஆட்சியமைக்கக் கூடியதனிப்பெரும்பாண்மையை பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சமய சார்பற்ற சக்திகளுக்கு காங்கிரஸ் ஆதரவு வழங்கும்

-செயற்குழு முடிவு

(டில்லி)

தேர்தல்கள் நடந்துமுடிந்த மாநிலங்களில் சமயசார்பற்ற சக்திகளுக்கு ஆதரவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கக் காங்கிரஸ் கட்சி அதன் தலைவர் பி. வி நரசிம்மராவிற்கு அனுமதி அளித்துள்ளது.

புதுடில்லியில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற கட்சியின் செயற்குழுக்கூட்டத்தில்இதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இக்கூட்ட. நிகழ்வுகள்பற்றி பத்திரிகையாளர்களுக்கு விளக்கிய கட்சியின் செய்தித் தொடர்பாளர் வி என். காட்கில் மேலும் கூறுகையில்,

இச்செயற்குழுக் கூட்டம் சுமார் அரைமணி நேரம் நீடித்ததாகவும்,உத்தரப் பிரதேச காங்கிரஸ் கட்சித்தலைவர் என். டி. திவாரி, பஞ்சாப் மாநில முதல்வர் பியான்ந்த்சிங் தவிர ஏனையோர் இதில் கலந்துகொண்டதாகவும் தெரிவித்தார்.

இமாசலப் பிரதேசத்தின் சட்டப்பேரவைக் கட்சித் தலைவரைத் தெரிவுசெய்வதற்கான கூட்டம் இன்று சிம்லாவில் நடைபெறுமெனவும் அவர் மேலும்தெரிவித்தார்.

இதனையடுத்து உத்தரப் பிரதேச மாநிலத்தில் பகுஜன் சமாஜ் கட்சி மற்றும் சமாஜவாதி ஜனதாக் கட்சி கூட்டணிக்கு காங்கிரஸ் ஆதரவு அளிக்கக் கூடும் என நம்பப்படுகிறது.

இதேவேளை பாரதீய ஜனதாக் கட்சி உத்தரப் பிரதேசத்தில் ஆட்சி அமைப்பதைத் தடுப்பதே தமது கட்சியின் உத்தியாக இருக்கும் என்று ஜனதா தள் கட்சியின் பொது செயலாளர் ராம்விலாஸ் பஸ்வான் கூறியுள்ளார்.

# பிருதிவி சோதனை

(டில்லி)

முற்றிலும் இந்தியாவிலேயே வடிவமைக்கப்பட்ட அதி நவீன பிருதிவிஏவுகணையின் பன்னிரண்டாவது சோதனை இன்று நடத்தப்படவுள்ளது,

ஒரிசா மாநிலம் சாந்திபூரில்அமைந்துள்ள ஏவுகணைத்தளத்திலிருந்து இந்த நடுத்தர வீச்சு ஏவுகணை செலுத்தப்பட இருப்பதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# தென்ஆபிரிக்காவுடன்உறவு அமெரிக்கா பெரும் ஆர்வம்

(வாஷிங்டன்)

அரசியல் ஆபத்துக்கள்இருக்கின்ற போதும் தென் ஆபிரிக்காவுடன் உறவுகளை வளர்த்துக் கொள்ள முடியும் என்று அமெரிக்க அமைச்சர் றொன் ரவுண் கூறியுள்ளார்.

அமெரிக்க கூட்டுத்தாபனங்களிடமிருந்து தென்ஆபிரிக்கா உதவியைப் பெறுவதற்கு வசதியாக உடன்படிக்கைகள் கைச் சாத்து இடப்படலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வர்த்தக தூதுக்குழுவொன்றுக்கு தலைமை தாங்கி தென்னாபிரிக்கத் தலைநகர் ஜோகான்ஸ்பேர்க் போயுள்ள அவர் அங்கு மேலும் கூறுகையில், அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இவ் விஜயத்தில்மூலம் அமெரிக்கா உறவுகளைப் புதுப்பித்துக் கொள்வதில் கொண்டுள்ள ஆர்வத்தைக் காட்டுகிறது எனவும் குறிப்பிட்டார்.

இதனால் தென் ஆபிரிக்கா மட்டுமன்றி அமெரிக்காவும் நன்மை அடைய இருப்பதாகவும் மேலும் கூறினார்.

## விடுவிக்கக் கோரிக்கை

(சென்னை)

செங்கல்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மலையகமக்கள் மறுவாழ்வு மன்றத்தின் நிறுவுனரான இரா. சிவலிங்கத்தை விடுதலை செய்யும்படி மேற்படி மன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தாயகம் திரும்பியோர் தேசிய பேரவையின் தலைவராகவும் ஜனநாயக தொழிலாளர் சங்கத்தின் தலைவராகவும், கோவை மனித உரிமைக் கழகத்தின் அமைப்பாளராகவும் பணிபுரிந்த இவர் கடந்த 05-08-93-ல் பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது தெரிந்ததே.

# எவரெஸ்டில் ஏறியதற்கு அபராதம் விதிப்பு

(காத்மண்டு)

எவரெஸ்ட் மலைச்சிகரத்திற்குஅதிகப்பேர்களைஅனுப்பிய பிரிட்டிஷ் மலையேறும் கோஷ்டி ஒன்றிற்கு நேபாளம் 100,000 டாலர் அபராதம் விதித்துள்ளது. கடந்த செப்டம்பர் மாதம் அமுலுக்கு வந்த விதிகளின்படி உலகின் மிக உயரமான எவரெஸ்டுக்கு செல்லும் வெளிநாட்டு மலை ஏறும் கோஷ்டி ஒன்றில் 7 பேர்களுக்கு மேல் இடம் பெறக்கூடாது.

ஆனால் பிரிட்டிஷ் கோஷ்டியில் பிரபல நடிகர் ஒருவர் உட்பட 14 பேர் இருந்தனர். இவர்களில் 7 பேர் எவரெஸ்டிற்கும் மற்றும் 7 பேர் எவரெஸ்டிற்கு அருகிலுள்ள டொட்லி சிகரத்திற்கும் செல்லவிருந்தனர்.

# எம்மிடம் ஆயுதபலம் உண்டு ஆட்பலத்தைப் பெருக்குவோம்

## மன்னார் மாவட்ட தளபதி கதிர் தெரிவிப்பு

மன்னார் பண்டிவிரிச்சாவில் மாவட்ட மட்டத்திலான மாவீரர் நாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்விற்கு மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் திரு நந்தகுமார் தலைமை வகித்தார்.

1993 ஆம் ஆண்டு மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழீழ தேசியத்தலைவர் அவர்களின் உரையை மக்கள் முன்னிலையில் திரு. சங்கீதன் அவர்கள் வாசித்தார். தொடர்ந்து மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி வளர்மதி, பொதுநிர்வாக தொடர்பகப் பொறுப்பாளர் திரு இளையவன், வன்னிப் பிராந்திய கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. நாவண்னன், பள்ளமடு பிரதேச கடற்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. வெற்றி, மாவட்ட மாணவரமைப்புப் பொறுப்பாளர் திரு இனியவன் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

இறுதியாக மாவட்டத் தளபதி திரு கதிர் உரை நிகழ்த்துகையில்; எமது மாவட்டத்தில் பிறந்து இந்த மண்ணில் போராடி வீரச்சாவெய்திய மாவீரர்கள் இருக்கின்றனர். ஆனால் வேறு மாவட்டங்களில் இருந்துவந்து எமது மாவட்டத்தையும் கிராமங்களையும் எதிரியிடமிருந்து பாதுகாத்துபோராடி வீரச்சாவெய்திய மாவீரர்கள் இங்குஏராளமாக இருக்கின்றனர். இவர்கள் மாவட்டத்தால் பிரதேசத்தால் வேறாக இருந்தாலும் மொத்தமாக தமிழீழம் என்ற தேசத்தை மீட்கவே போராடி மடிந்தார்கள் எனவும், எம்மிடம் ஆயுத பலம், மனோபலம் நிறைய உண்டு ஆனால் ஆட்பலம் எமக்கு நிறையத் தேவை. இதைநிறைவேற்ற ஒவ்வொருவரும் இயக்கத்தில் இணைய வேண்டுமெனவும் குறிப்பிட்டார். தொடர்ந்து இரவு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. பின்னர் அதிகாலை 2.00 மணியளவில் தமிழீழ தேசியக் கொடியை மாவட்ட அரசியல்துணைப் பொறுப்பாளர் திரு நந்தகுமார் இறக்கி வைத்தார்.

# யாழ்ப்பாண கடல்நீரேரி அபிவிருத்தி ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உட்கட்டுமாணப் பகுதியினரால் ஒழுங்கு செய்யப்பட்ட யாழ்ப்பாணக் கடல் நீரேரி அபிவிருத்தி திட்ட ஆய்வரங்கு நேற்று பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் நடைபெற்றது. காலை 8.30மணிக்கு தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் ஏற்றிவைத்தார். யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மங்கள விளக்கினை ஏற்றிவைத்தார்.

பல்கலைக்கழக துணைவேந்தர் அ துரைராஜா தலைமையில் நடைபெற்ற இவ்வாய்வரங்கில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவன பொறுப்பாளர் செம்பியன், தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன், உட்கட்டுமாணப் பிரிவுபொறுப்பாளர் சோழன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். ஆய்வரங்கில் யாழ். ஏரித்திட்ட விபரம் நன்மைகள், உப்பாற்றுத் திட்டம், குடாநாட்டின் நில நீர் அபிவிருத்தி, தொண்டமனாறு நன்னீர் ஏரித்திட்டமும் அதன் பலன்சளும் போன்ற பல விடயங்கள் குறித்த அமர்வுகள் இடம்பெற்றன. மாலை கருத்துரைகளும் இடம்பெற்றன.

## உதைபந்தாட்டம்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2-30 மணிக்குப் பின்வரும் போட்டிகள் யாழ், பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெறும். 17 வயதுப் பிரிவில் புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தை எதிர்த்து அருணோதயக் கல்லூரியும் 19 வயதுப் பிரிவில் ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து நாவாந்துறை றோ. க. வித்தியாலயமும் விளையாடும்.

அறிவுக் களஞ்சியம் - 18
சிறந்த அறிவியல் ஏடு
வெளிவந்தது! ரூ. 12-
(6709)

# காங்கிரஸ் தோல்விக்கு தலைமை மீது கண்டனம்

மாநிலத் தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவுகளுக்கு கட்சித் தலைமையே பொறுப்பேற்கவேண்டும் என்று இந்திரா காங்கிரஸ் அமைச்சர்- கட்சித் தலைமையைக் கண்டித்துள்ளார்.

கிராமிய அபிவிருத்தி அமைச்சர் ராம்சிங் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கட்சித் தொண்டர்கள் மட்டத்தில் ஒழுங்கும் கட்டுப்பாடும் குலைந்து விட்டது என்றார்.

# அதிகாரி இன்றுசெல்வார்

(யாழ்ப்பாணம்)

இன்று கொழும்பு நோக்கி புறப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற ''குமாரி'' கப்பலில் யாழ். கல்வித் திணைக்கள வடக்குப் பிரதேச கல்வி அதிகாரியான திரு கே. கந்தசாமி கொழும்பிற்கு புறப்பட்டுச் செல்லவுள்ளார் என யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

### புலிகளின்

இப்போது இராணுவ கட்டுக்கோப்பாக வடிவெடுத்துள்ளது. கேள்வி கேட்காதே செய் அல்லது செத்துமடி என்பது தாரக மந்திரம். எனவே தியாகம் என்றகருத்து புதியதல்ல.

புலிப்படையினரின் தற்கொலைப்படை பற்றிவிளக்க இக் கருத்து உதவுகிறது அண்மையில் யாழ்ப்பாணம் சென்று திரும்பிய மருத்துவர் இது பற்றி கூறுகையில் அவமானத்தையும் அநீதியையும் தாங்கி வாழ்வதை விடதலை நிமிர்ந்து இறப்பதுமேல் என கூறினார். கட்டுப்பாட்டை, நிதானத்தை இழந்து விடுவோமோஎன்ற அச்சம் மரபு மரபாக தமிழர்களிடையே உள்ளது புலிகள் எதிரியிடம் சிக்கவேண்டி ஏற்பட்டால்எடுப்பதற்காகசயனைட் குப்பியை கழுத்தில் அணிந்துள்ளனர். சயனைட் உட்கொண்டால் சித்திரவதையின் போது அல்லது விசாரணையின் போது நிதானம் இழக்கவேண்டி ஏற்படாது அவமானம் அடைய வேண்டியிராது இந்த மரபு வழிவந்தவற்றுக்கு இராணுவ பலம் கொடுப்பதன் மூலம் புலிகள் எளிதான தீர்வை காணுகின்றனர் என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வன்னியில்

காரணமாகவும்வன்னிப்பிராந்தியத்தின் பல பகுதிகளில் வீதிப் போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன.

### கடும் மழை

கப்படவில்லை என தெரியவருகின்றது.

இதனை அடுத்து பாதிக்கப்பட்ட மக்கள் இணைந்து சண்டிலிப்பாய் உதவி அரச அதிபரிற்கு மகஜர் ஒன்றை நேற்று கையளித்துள்ளனர். மேலும் அவ் உதவி அரச அதிபர் இன்று மேற்படி பகுதியை நேரில் சென்று பார்வையிடுவார் எனவும் தெரியவருகின்றது

இதேவேளை வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் முகாம்கள் பல, இம்முறை தொடர்ந்து பெய்து வரும் மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன மழை வெள்ளம் முகாம் பகுதிகளில் தேங்கி நிற்பதால், பல குடிசைகள், பாதிக்கப்பட்டுள்ளன. இரவு வேளைகளில், இம் முகாம்களில் வசிப்போர் அயலிலுள்ள பாடசாலைகளில் தங்கச் செல்கின்றனர்.

(பா, 11, 09,)

# இந்தியாவில் இடம்பெற்

## 5 சட்டசபைத் தேர்தல்முடிவுக

| | உத்தர பிரதேசம் | ராஜஸ்தான் | இமாசல பிரதேசம் | டில்லி | மத்திய பிரதேசம் |
|---|---|---|---|---|---|
| மொத்த இடங்கள் | 425 | 200 | 68 | 70 | - |
| தேர்தல் இடம்பெற்றவை | 422 | 199 | 68 | 70 | - |
| வெளிவந்த முடிவுகள் | 369 | 199 | 68 | 70 | - |
| பாரதீய ஜனதா | 132 | 93 | 08 | 49 | |
| இந்திரா காங்கிரஸ் | 28 | 77 | 52 | 14 | |
| ஜனதா தளம் | 26 | 06 | - | 04 | |
| சமாஜவாதி ஜனதா பகுஜன் சமாஜ் கூட்டு | 170 | - | - | - | |
| இடதுசாரிகள் | 03 | 01 | 01 | - | |
| சுயேட்சையும் 'ஏனையவையும். | 10 | 22 | 07 | 03 | |

மீண்டும் சாவகச்சேரி
தெய்வேந்திராவில்
அகன்ற வெண்திரையில்
தமிழோசையுடன்
THE SUPER COPS
இன்று பி. ப. 2-00-4-30 காட்சிக...
காண்பிக்கப்படும் (6...)

நவம்பர்மாதம் 'உலகைஉலா' வந்துவிட்டீர்களா?
நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் நவம்பர் மாத உலக உலாவை வாங்கி படிக்க வேண்டியதுதான்!
உடன் உலகினை வலம் வந்த உணர்வினைப் பெறுவீர்கள்!!
- நியூஸ்வீக், ஏசியாவீக், ரைம், றீடேர்ஸ் டைஜஸ்ட் போன்ற அனைத்துலக ஆங்கிலச் சஞ்சிகைகளின் அரிய கட்டுரைகள்!
- உலகின் பல்துறைசார் செய்திகள்!!
- தமிழீழ ஏடுகள் எவற்றிலுமே வெளிவராத அருமையான விடயங்கள்!!!

## கண்ணீர் அஞ்சலி

### சண்முகநாதன் குகானந்தன்

எமது ஸ்தாபனத்தில் முகாமையாளராக பணிபுரிந்த ச. குகானந்தன் அவர்கள் அகால மரண...

துணைப் பொறுப்பாளர் கரிகாலன், உட்கட்டுமாணப் பிரிவுபொறுப்பாளர் சோழன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். ஆய்வரங்கில் யாழ்.

அருணோதயக் கல்லூரியும் 19 வயதுப் பிரிவில் ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து நாவாந்துறை றோ. க. வித்தியாலயமும் விளையாடும்.

சிறந்த அறிவியல் ஏடு

வெளிவந்தது! ரூ. 12-


(6709)

## நவம்பர்மாதம் 'உலகைஉலா' வந்துவிட்டீர்களா?

**நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் நவம்பர் மாத உலக உலாவை வாங்கி படிக்க வேண்டியதுதான்!**

**உடன் உலகினை வலம் வந்த உணர்வினைப் பெறுவீர்கள்!!**

- நியூஸ்வீக், ஏசியாவீக், ரைம், றீடேர்ஸ் டைஜஸ்ட் போன்ற அனைத்துலக ஆங்கிலச் சஞ்சிகைகளின் அரிய கட்டுரைகள்!
- உலகின் பல்துறைசார் செய்திகள்!!
- தமிழீழ ஏடுகள் எவற்றிலுமே வெளிவராத அருமையான விடயங்கள்!!!



அறிவினை வளர்க்கும் அருமையான செய்திகளை, ஆய்வுக் கட்டுரைகளை அழகுதமிழிலே மாதாந்தம் தருவது

### உலக உலா

0 உலக விவகாரங்கள்
0 செய்திச் சரங்கள்
0 புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள்
0 மருத்துவ சாதனைகள்
0 தொழில்நுட்ப வியப்புக்கள்
0 வாணிகம்
0 மனிதவியல் வரலாறு
0 குற்றவியல்
0 விண்வெளி அறிவியல்
0 விளையாட்டுச் செய்திகள்
0 அறிவியல் ஆய்வு

இன்னும் பல அற்புதங்கள்! ஆச்சரிய வியப்புக்கள்!!

**பொதுஅறிவுக் களஞ்சியமாகப் பைந்தமிழிலே மலர்கிறது**

### உலக உலா

பூர்வீக இராட்சத விலங்கினமான டைனோசரை மீளவும் உருவாக்க முடியுமா? திடுக்கடும் பல விஞ்ஞான உண்மைகளைத் தாங்கி இம்மாத உலக உலா வெளிவந்துள்ளது.

**உங்கள் பிரதிக்கு முந்துங்கள்...**

யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்துப் புத்தகக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (சி-8021)

இதனை அடுத்து பாதிக்கப்பட்ட மக்கள் இணைந்து சண்டிலிப்பாய் உதவி அரச அதிபரிற்கு மகஜர் ஒன்றை நேற்று கையளித்துள்ளனர். மேலும் அவ் உதவி அரச அதிபர் இன்று மேற்படி பகுதியை நேரில் சென்று பார்வையிடுவார் எனவும் தெரியவருகின்றது

இதேவேளை வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் முகாம்கள் பல, இம்முறை தொடர்ந்து பெய்து வரும் மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன மழை வெள்ளம் முகாம் பகுதிகளில் தேங்கி நிற்பதால், பல குடிசைகள், பாதிக்கப்பட்டுள்ளன. இரவு வேளைகளில், இம் முகாம்களில் வசிப்போர் அயலிலுள்ள பாடசாலைகளில் தங்கச் செல்கின்றனர்.

(பா, 11, 09,)

### இரவுநேர

இத்தாக்குதலினால் ஒருவர் காயமடைந்தார். மூன்றிற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. இத்தாக்குதலின் போது கெற்பெலியைச் சேர்ந்த தெய்வேந்திரம் (வயது 44) என்பவரே காயமடைந்தவராவார். இவரது வீடும் பலத்தசேதமடைந்தது (86)

### எறிகணை

ரப்பகுதிகளையும் நோக்கி பரவலாக எறிகணை வீச்சு நடத்தப்பட்டது.

குருநகர், றெக்கிளமேசன் மத்திய கிழக்கு வீதியில் வீழ்ந்து வெடித்த இரு எறிகணைகளால் இரு வீடுகள் சேதமடைந்தன. (21)

### க. பொ. த

பத்திர சாதாரண தரப் பரீட்சைக்கான பாடங்களிலும் மாற்றங்கள் கொண்டு வரப்படவிருப்பதாகவும் கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

### சுதந்திரக்

இணைந்து கொள்ள தொண்டமான் மட்டுமல்ல, ஈ.பி.ஆர்.எல்.எவ், முஸ்லிம் காங்கிரஸ் என்பனவும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுவருகின்றன.

விஜேதுங்கவின் நிலைப்பாட்டுக்கு மாறான நிலைப்பாட்டினை சிறிலங்கா சுதந்திரக் கட்சி எடுப்பதன் மூலம் இக் கட்சிகளை தம்முடன் இணைத்துக் கொள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி முயல்கிறது.

மேலும் மக்கள் ஐக்கியமுன்னணி, நவசமசமாஜக் கட்சி என்பவற்றையும் தம்முடன் இணைத்துக் கொள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி முயன்று வருகிறது என அச் செய்தியாளர் தெரிவித்தார்.

## தெய்வேந்திராவில்

அகன்ற வெண்திரையில்

தமிழோசையுடன்

**THE SUPER COPS**

இன்று பி. ப. 2-00-4-30 காட்சிகளா[illegible]

காண்பிக்கப்படும் (6[illegible])

## கண்ணீர் அஞ்சலி

### சண்முகநாதன் குகானந்தன்

எமது ஸ்தாபனத்தில் முகாமையாளராக பணிபுரிந்த ச. குகானந்தன் அவர்கள் அகால மரணமடைந்தார். அவரின் ஆத்மா சாந்தியடைய எமது ஸ்தாபனத்தின் சார்பில் பிரார்த்தித்து அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உரிமையாளர்களும், ஊழியர்களும்,
சிவசக்தி பலசரக்கு மாளிகை,
138, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(6730)

## மரண அறிவித்தல்கள்

### தர்மலிங்கம் சனோஜா

செல்வி சனோஜா 22-11-93 அன்று அகாலமரணமானார். இவர் தர்மலிங்கம் (பாபு சவுதி) மஞ்சு[illegible] தம்பதிகளின்செல்வப் புதல்வியும் ஜனாத்தனின் அ[illegible]வுமாவார், இவ்வறிவித்தலை உற்றார், உறவின[illegible] நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமா[illegible] கேட்டுக் கொள்கின்றனர்.

தகவல்

சிவன் கோயிலடி,
எழுதுமட்டுவாள்

மஞ்சு (தாய்)
(6723)

### நடேசு நடராசமணி

(நகுலேஸ்வர மகாவித்தியாலய [illegible]பர்)

மாவிட்டபுரம் மடத்தடியை பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு நடராசமணி அவர்கள் 29-11-93 மாலை 6 மணியளவில் அகால மரணமானார். இவரது பூதவுடல் இன்று செவ்வாய்க்கிழமை தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டு கொள்கின்றேன்.

தகவல்:

டிப்போ வீதி,
மல்லாகம்.

(6732)

நந்தன்
(மருமகன்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது